RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025





சிவகங்கை மலர்-4 இதழ்-35 04 பிப்ரவரி செவ்வாய்க்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ. 5

## திருப்பரங்குன்றம் மலை விவகாரம்: மதுரையில் இரு நாட்களுக்கு 144 தடை உத்தரவு அமல்

மதுரை, பிப்.4

மதுரை மாவட்ட ஆட்சியர் சங்கீதா வெளியிட்ட அறிக்கையில், "வரும் 4ம் தேதி இந்து அமைப்பினர் மற்றும் அதன் ஆதரவு அமைப்பினர் திருப்பரங்குன்றம் கோயில் முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட உள்ளதாகவும் அதற்கு தென் மாவட்டங்களில் இருந்து பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் கலந்து கொள்ள உள்ளதால் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு காவல்துறையினர் அனுமதி மறுத்து உள்ளனர்.




இதனிடையே இந்து மற்றும் இஸ்லாமிய அமைப்புக்களை சார்ந்தோர் திருப்பரங்குன்றம் மலை குறித்து தங்கள் கோரிக்கையை பல்வேறு கருத்துக்களை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்து வருகின்றனர்:

இதனால் இந்து மற்றும் இஸ்லாமிய அமைப்பினர் இடையே அசாதாரண சூழல் உருவாக வாய்ப்புள்ளதால் மதுரை மாவட்டம் மற்றும் மாநகர் முழுவதும் வெளி நபர்கள் பிரவேசிக்காத வகையில் 322025 காலை 6 பணி முதல் 422025 இரவு 12 மணி வரை 2 நாட்கள் மட்டும் மதுரை மாநகர் மற்றும் மதுரை மாவட்டத்தில் பொது அமைதியை பாதுக்காக்கும் பொருட்டு, மனித வாழ்வு , பொது பாதுகாப்பு மற்றும் பொது அமைதியை கருத்தில் கொண்டும் போராட்டங்கள், கூட்டங்கள் மற்றும் தர்ணாக்கள் போன்றவற்றிற்கு 163 BNSS (144 CrPC) தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது." எனத் தெரிவித்துள்ளார்.

பிரச்சினையின் பின்னணி: திருப்பரங்குன்றம் மலையில் காசி விஸ்வநாதர் கோயில் சிக்கந்தர் தர்கா அமைந்துள்ளது. சில நாட்களுக்கு முன்பு சிக்கந்தர் தர்காவில் ஆடு, கோழி பலியிட்டு கந்தூரி விழா நடத்தப்படும் என தர்கா நிர்வாகம் அறிவிப்பு வெளியிட்டது. இதையடுத்து திருப்பரங்குன்றம் மலைக்கு ராமநாதபுரம் எம்பி நவாஸ்கனி ஆட்களுடன் வந்தார். அப்போது எம்பியுடன் வந்தவர்கள் மலைப்பகுதியில் அசைவ உணவு சாப்பிட்ட புகைப்படம் சமூக வலைதளங்களில் வெளியானது. இவற்றால் திருப்பரங்குன்றம் மலைப் பிரச்சினை சர்ச்சையானது.

இந்நிலையில் திருப்பரங்குன்றம் மலையை பாதுகாக்க வலியுறுத்தி பிப். 4ல் இந்து முன்னணி மற்றும் இந்து அமைப்புகள் சார்பில் 16 கால் மண்டபம் அருகே ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. இதற்கு அனுமதி கோரி இந்து முன்னணியின் மதுரை மாவட்ட பொதுச் செயலாளர் கலாநிதி மாறன் திருப்பரங்குன்றம் காவல் நிலையத்தில் மனு அளித்தார். தொடர்ந்து இந்த ஆர்ப்பாட்டத்துக்கு இந்து மதத்தினர் திரண்டு வருமாறு இந்து அமைப்புகள் சார்பில் சமூக வலை தளங்களில் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது.

இந்தச் சூழலில் இந்து முன்னணி ஆர்ப்பாட்டத்துக்கு அனுமதி மறுத்து திருப்பரங்குன்றம் காவல் உதவி ஆணையர் உத்தரவு பிறப்பித்தார். இந்நிலையில், திருப்பரங்குன்றத்தில் தடையை மீறி பிப். 4ல் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என இந்து முன்னணி பொதுச் செயலாளர் கலாநிதிமாறன் தெரிவித்துள்ளார்.

## அண்ணா நினைவுநாளில் முதல்வர் ஸ்டாலின் தலைமையில் திமுகவினர் அமைதிப் பேரணியாக சென்று மரியாதை

சென்னை, பிப்.4

மறைந்த முன்னாள் முதல்வர் அண்ணாவின் 56வது நினைவு நாள் நேற்று (பிப்.3ம் தேதி) அனுசரிக்கப்படுகிறது. இதனை ஒட்டி திமுக தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் தலைமையில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், கட்சியின் பொதுச் செயலாளர் துரை முருகன், பொருளாளர் டி.ஆர். பாலு உள்ளிட்டோர் காமராஜர் சாலையில் அமைந்துள்ள அண்ணா நினைவிடத்தில் மலர் வளையம் வைத்தும், மலர்களைத் தூவியும் மரியாதை செலுத்தினர்.





முன்னதாக வாலாஜா சாலையில் உள்ள அரசு விருந்தினர் மாளிகை அருகில் இருந்து புறப்பட்டு, அண்ணா நினைவிடம் வரை நடைபெற்ற அமைதிப் பேரணியில் முதல்வர் ஸ்டாலின், திமுக பொதுச்செயலாளரும் அமைச்சருமான துரைமுருகன், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், திமுக பொருளாரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர்.பாலு, துணை பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.ராசா அமைச்சர்கள் எம்.ஆர்.கே பன்னீர் செல்வம், ராஜகண்ணப்பன், மா.சுப்பிரமணியன், சேகர்பாபு , மெய்யநாதன் கயல்விழி செல்வராஜ் , மதிவேந்தன். மற்றும் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு குழு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், சட்டப்பேரவை உறுப்பினர்கள், சென்னை மேயர், துணை மேயர் உள்ளிட்ட ஆயிரக்கணக் கானோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து அவர்கள் அண்ணா நினைவிடத்தில் மரியாதை செலுத்தினர். மெரினாவில் அமைந்துள்ள கருணாநிதி நினைவிடத்திலும் முதல்வர் மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்தினார்.

'வம்பிழுக்கும் வீணர்கள் தெம்பிழந்து ஓடுவார்கள்' மேலும் அண்ணா நினைவு நாளை ஒட்டி முதல்வர் தனது சமூகவலைதளப் பக்கத்தில் பகிர்ந்துள்ள பதிவில், "அண்ணா வழியில் அயராது உழைப்போம்! தந்தை பெரியார் குறித்து பேரறிஞர் அண்ணா கூறியது: "எது நேரிடினும் மனத்திற்பட்டதை எடுத்துச் சொல்வேன் என்ற உரிமைப் போர் பெரியாருடைய வாழ்வு முழுவதும். அதிலே அவர் கண்ட வெற்றி மிகப்பெரியது. அந்த வெற்றியின் விளைவு அவருக்கு மட்டும் கிடைத்திடவில்லை; இன்று அனைவரும் பெற்றுள்ளனர்."

தந்தை பெரியாரின் புகழொளியையும் அறிவொளியையும் தந்து நம்மை ஆளாக்கிய தமிழ்த்தாயின் தலைமகன் பேரறிஞர் அண்ணாவுக்குப் புகழ்வணக்கம்! நம்முடைய நோக்கம் பெரிது! அதற்கான பயணமும் பெரிது! வம்பிழுக்கும் வீணர்கள் தெம்பிழந்து ஓடுவார்கள்; நாம் மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற்று இலட்சியப் பயணத்தில் வெல்லப் பாடுபடுவோம்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

## தமிழகம் மீது பாஜகவுக்கு அக்கறை இல்லை என்பதா? திமுகவுக்கு தமிழிசை கண்டனம்

சென்னை, பிப்.4

பாஜகவுக்கு தமிழகம் குறித்து அக்கறை இல்லை என்பது போன்று பேசுவது தவறு என திமுகவுக்கு முன்னாள் ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: தமிழக வெற்றிக் கழகம் ஓராண்டை நிறைவு செய்தமைக்கு வாழ்த்துகள். மத்திய பட்ஜெட்டில் தமிழகம் என்ற வார்த்தை இல்லை என்று திமுகவினர் கூறுகின்றனர்.

வருமான வரி உச்சவரம்பு உதமிழகத்துக்கான நிதி கிடைக்க வேண்டும் என்பதில் பாஜகவும் குறிக்கோளுடன் இருக்கிறது. பாஜகவுக்கு தமிழகம் குறித்து அக்கறை இல்லை என்பது போன்று திமுகவினர் பேசுவது தவறு. பாஜகவோடு போட்டியிடும் தன்மை திமுகவுக்கு இல்லை. பாஜகவினர் பங்கேற்கும் நிகழ்ச்சிகளில் பவர் கட் செய்வது வாடிக்கையாகிவிட்டது.

மாசுபட்டவர் யார்? அண்ணா பல்கலைக்கழக விவகாரத்திலும் எந்த கட்சிக்கும் முதலில் தொடர்பில்லை என கூறிய நிலையில், மாசுபட்டவர் யார் என இதுவரை தெரியவில்லை. முதலில் ஆதவ் அர்ஜுனாவை அனுப்பிவிட்டு பின்னர் ஆதவனிடம் இருந்து திருமாவளவன் வெளியேறு வாரா என்று தெரியவில்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## ரயில்வே பாதுகாப்பு படை டிஐஜிக்கு ஜனாதிபதி பதக்கம்



இந்தியா முழுதும் இரயில்வே பாதுகாப்பு படையில் சிறப்பாக பணியாற்றி வருவோரில் 15 பேர், ஜனாதிபதி பதக்கத்துக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதில் குறிப்பாக தெற்கு ரயில்வேயில், ரயில்வே பாதுகாப்பு படை ரயில்வே டிவிஷனல் இன்ஸ்பெக்டர் ஜெனரல் இப்ராஹிம் செரீப் இந்த பதக்கத்துக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.மேலும் ரயில்வேயில் பல்வேறு மண்டலங்களில் 19 வருடங்களுக்கு மேலாக பணியாற்றி வருகிறார்.நாக்பூர் உள்ளிட்ட ரயில் கோட்டங்களில், மாவோயிஸ்ட்களுக்கு எதிராகவும், பயணியருக்கு எதிரான குற்றங்களை தடுத்து, ரயில்கள் பாதுகாப்பாக இயக்க, இவரது பங்களிப்பு முக்கியம். கடந்த 2024 ஆம் ஆண்டு ஏப்12 முதல் தெற்கு ரயில்வேயில் பணியாற்றி வருகிறார். ஜனாதிபதி பதக்கம், வரும் செப்டம்பரில், மத்திய ரயில்வே அமைச்சகத்தால் வழங்கப்பட உள்ளது.

## 'ஏடிஜிபி உயிருக்கே ஆபத்து; காவல்துறைக்கு ஒரு கரும்புள்ளி' முதல்வர் ஸ்டாலினுக்கு இபிஎஸ் கண்டனம்

சென்னை, பிப்.4

"ஏடிஜிபி உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பது8 என்பது, ஸ்டாலின் தான் நிர்வகிப்பதாக சொல்லும் காவல்துறையின் மேல் தானே வைத்துள்ள பெரும் கரும்புள்ளி. சம்பந்தப்பட்ட பெண் அதிகாரியின் குற்றச்சாட்டை வெளிப்படைத் தன்மையுடன் முறையாக விசாரித்து, இதில் தொடர்புள்ளோர் அனைவர் மீதும் கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்." என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.



இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில், "தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையத்தில் நடக்கும் குளறுபடிகளை சுட்டிக்காட்டியதற்காக, தன்னை கொலை செய்யும் நோக்கில் தன் அலுவலகம் தாக்கப்பட்டதாக காவல்துறை கூடுதல் டிஜிபி கல்பனா நாயக் ஐ.பி.எஸ் தெரிவித்திருப்பதாக வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது.

"சற்று நேரம் முன்பு நான் சென்றிருந்தால், என் உயிரை இழந்திருப்பேன்" என்ற அவரின் கூற்று நெஞ்சை பதற செய்கிறது. தங்கள் துறையின் ஊழல்களைச் சொன்னதற்கே, அவரை கொலை செய்ய துணிந்துவிட்டார்கள் என்பது மிகவும் கீழ்த்தரமானது , இந்த செயலுக்கு ஸ்டாலின் என்ன பதில் சொல்லப் போகிறார்?

தமிழ்நாட்டில் ஒரு ஏடிஜிபியை கொலை செய்யும் நோக்கில், அவரின் அரசு அலுவலகம் தீக்கிரையாக்கப் படுகிறது என்றால், இந்த ஆட்சியில் நடக்கும் முறைகேடுகளைச் சொன்னால், அது ஏடிஜிபியாக இருந்தால் கூட, மிரட்டலும் கொலையும் தான் பதிலா?

இந்த சூழல் இருக்கும் ஆட்சியில், மக்கள் எப்படி தங்கள் குறைகளை தைரியமாக சொல்ல முடியும்? ஏடிஜிபி உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பது என்பது, ஸ்டாலின் தான் நிர்வகிப்பதாக சொல்லும் காவல்துறையின் மேல் தானே வைத்துள்ள பெரும் கரும்புள்ளி!

இந்த கண்டனத்திற்குரிய வெட்கக்கேடான நிலைக்கு ஸ்டாலின் மாடல் திமுக அரசு முழு பொறுப்பேற்க வேண்டும். ஏடிஜிபி கல்பனா நாயக் ஐபிஎஸ். க்கு உரிய பாதுகாப்பு அளிக்கப்படுவதை இந்த ஸ்டாலின் மாடல் திமுக அரசு உறுதிசெய்ய வேண்டும். உடனடியாக ஏடிஜிபி கல்பனா நாயக்கின் குற்றச்சாட்டை வெளிப்படைத் தன்மையுடன் முறையாக விசாரித்து, இதில் தொடர்புள்ளோர் இருப்பின், அனைவர் மீதும் கடும் சட்ட நடவடிக்கை எடுக்க திமுக அரசை வலியுறுத்துகிறேன்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

## நேர்காணல் மூலம் சிறப்பு மருத்துவர்களை நியமிக்க எதிர்ப்பு தேர்வு நடத்துமாறு அரசு மருத்துவர் சங்கங்கள் வலியுறுத்தல்

சென்னை, பிப்.4

நேர்காணல் மூலம் சிறப்பு மருத்துவர்களை நியமிப்பதற்கு அரசு மருத்துவர்களுக்கான சட்டப்போராட்டக் குழு தலைவர் மருத்துவர் பெருமாள் பிள்ளை, அரசு மருத்துவர்கள் மற்றும் பட்ட மேற்படிப்பு மருத்துவர்கள் சங்கம் பொதுச்செயலாளர் ராமலிங்கம், தமிழ்நாடு மருத்துவ அலுவலர்கள் சங்கம் பொதுச்செயலாளர் அகிலன் ஆகியோர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.



மருத்துவர் பெருமாள் பிள்ளை: தமிழகத்தில் திடீரென்று நேர்காணல் மூலமாக 207 மகப்பேறு மருத்துவர்கள் உள்ளிட்ட658 சிறப்பு மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்கள் என தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் அறிவித்திருப்பது மிகப்பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அரசின் இந்த அறிவிப்பு செயல்படுத்தப்பட்டால், பல்வேறு குழப்பங்களையும், மிகப்பெரிய பின்னடைவையும் ஏற்படுத்தும்.

அரசு பணிக்கு தமிழ்நாடு தேர்வாணையம் மூலம் மருத்துவர்களை தேர்வு செய்யும் போது, உடனடியாக பணி நியமனம் செய்ய முடியவில்லை. காலதாமதம் ஆகிறது என்ற காரணத்துக்காக தான் மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம் தொடங்கப்பட்டது. அப்படியிருக்க, இப்போது திடீரென்று நேர்காணல் மூலம் மருத்துவர்கள் நியமனம் செய்வதை கடுமையாக எதிர்க்கிறோம். மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம் மூலமாக மட்டுமே மருத்துவர்களை தேர்வு செய்ய வேண்டும்.

மருத்துவர் ராமலிங்கம்: தமிழ்நாடு தேர்வாணையம் மூலம் மருத்துவர்களை தேர்வு செய்து நியமிப்பதில் ஏற்படும் தாமதத்தை போக்கவே, மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம் அமைக்கப்பட்டது. ஆனால், தற்போது நேர்காணல் மூலம் மருத்துவர்களை நியமிக்கும் முடிவு தவறானது.

நேர்காணல் முறை என்பது சுகாதார அமைப்புக்கு ஒரு தடையாகும். காலியான பணியிடங்களை நிரப்ப தகுதியான மருத்துவர்களை தேர்வு நடத்தியே நியமனம் செய்ய வேண்டும். நேர்காணல் மூலம் நியமனம் என்பது இட ஒதுக்கீடு இல்லாமல் சமூக நீதிக்கு எதிராக அமையும். தரமற்ற நபர்களை ஊழல் செய்து பணியில் அமர வாய்ப்பு ஏற்படும்.

மருத்துவர் அகிலன் சுகாதாரத்துறை செயலாளருக்கு எழுதியுள்ள கடிதத்தில், "சிறப்பு மருத்துவர்களை நேர்காணல் மூலம் நியமிப்பதில் வெளிப்படை தன்மை இருக்காது. அதனால், இதனை கடுமையாக எதிர்க்கிறோம். நேர்காணல் மூலம் உடனடியாக நியமிக்க வேண்டிய அவசியம் தற்போது இல்லை. சிறப்பு மருத்துவர்கள் வெளிப்படையான, தகுதி அடிப்படையில், தேர்வு நடத்தி நியமனம் செய்வதை உறுதி செய்ய வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

## பிப்.20 முதல் எந்த நேரத்திலும் போக்குவரத்து தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் நடைபெறும்: அண்ணா தொழிற்சங்கம்



சென்னை, பிப்.4

பிப்.20 முதல் எந்த நேரத்திலும் போக்குவரத்து தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் நடைபெறும் என அண்ணா தொழிற்சங்கம் அறிவித்துள்ளது. சென்னையில் நேற்று அண்ணா தொழிற்சங்கத்தின் தலைமையின் கீழ் செயல்படும் கூட்டமைப்பு சங்கங்களின் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதில் தேமுதிக, புரட்சி பாரதம் உள்ளிட்ட 22 சங்கங்களை சேர்ந்த நிர்வாகிகள் பங்கேற்றனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் அண்ணா தொழிற்சங்க பேரவைச் செயலாளர் ஆர்.கமலகண்ணன் கூறியதாவது: வரும் 5ம் தேதி போக்குவரத்து செயலரை சந்தித்து வேலைநிறுத்த நோட்டீஸை வழங்கவிருக்கிறோம். இதையடுத்து 20ம் தேதி முதல் எந்த நேரத்திலும் வேலைநிறுத்தம் நடைபெறும். தொமுசவை தவிர்த்து அனைத்து சங்கங்களையும் ஒருங்கிணைத்து போராட்டத்தை முன்னெடுக்க உள்ளோம்.

அதிமுக ஆட்சியில் 3 ஆண்டு காலமாக இருந்த ஒப்பந்த காலத்தை 4 ஆண்டுகளாக்கினர். தற்போது 6ம் ஆண்டை கடந்தும் ஊதிய பேச்சு வார்த்தை நடைபெறவில்லை. ஓய்வூதியர்களுக்கான அகவிலைப்படி உயர்வு, பணப் பலன் வழங்கப்படவில்லை. இது கண்டிக்கத்தக்கது.

அங்கீகார தேர்தல் நடத்தி, 51 சதவீதம் வாக்கு பெறும் சங்கத்தை பேச்சுவார்த்தைக்கு அழைக்க வேண்டும் என உயர் நீதிமன்றத்தில் ஆளுங்கட்சித்தொழிற்சங்கம் உத்தரவு பெற்றிருக்கின்றது. இந்த விவகாரத்தில் உச்சநீதிமன்றத்தில் அண்ணா தொழிற்சங்கம் தொடர்ந்த வழக்கு நிலுவையில் இருக்கிறது.

அனைத்து சங்கங்களையும் இணைத்து பேச்சு வார்த்தை நடத்தப்பட வேண்டும். அதன் பிறகு அங்கீகார தேர்தல் நடத்தட்டும். ஊதிய உயர்வு வழங்குவதை தவிர்க்க அங்கீகார தேர்தல் போன்ற நடவடிக்கையை கையில் எடுத்துள்ளனர்.

சிஐடியு மனவருத்தம்: தொமுச செய்யும் தவறுகளால் அவர்களுடன் இருந்த சிஐடியு உள்ளிட்ட சங்கங்களால் தொழிலாளர்களை சந்திக்க முடியவில்லை. மனவருத்தத்தில் இருக்கின்றனர். அண்ணா தொழிற்சங்கம் போராட்டத்தை முன்னெடுக்கும் நிலையில், எங்களுக்கு ஆதரவு கொடுக்க அனைத்து சங்கங்களும் தயாராக இருக்கின்றனர். இவ்வாறு ஆர்.கமலகண்ணன் தெரிவித்துள்ளார்.

# வேலூர் கோட்டை ரோட்டரி சங்கம் சார்பில் இலவச சிறுநீரக பரிசோதனை மற்றும் ஆலோசனை முகாம்





வேலூர் பிப்.4

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, ஓடை பிள்ளையார் கோயில் அருகே, இந்தியன் ஆயில் பெட்ரோல் பங்க், லாரி உரிமையாளர்கள் சங்க அலுவலக அரங்கில், வேலூர் கோட்டை ரோட்டரி சங்கம், வேலூர் லாரி உரிமையாளர்கள் சங்கம் மற்றும் தமிழ்நாடு கிட்னி ஆராய்ச்சி மையம் பவுண்டேஷன் இணைந்து நடத்தும் இலவச சிறுநீரக பரிசோதனை மற்றும் ஆலோசனை முகாம் வேலூர் லாரி உரிமையாளர்கள் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சிறுநீரக ஆராய்ச்சி ஃபவுண்டேஷன் சிறப்பு மருத்துவர் டாக்டர்.ராஜலட்சுமி ரவி, கிட்னி பவுண்டேஷன் குழுவினர் மற்றும் விமல் நர்சிங் கல்லூரி செவிலியர்கள் என பலர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இம்முகாமில் லாரி உரிமையாளர்கள் சங்க செயலாளர் ராமு மற்றும் வேலூர் கோட்டை ரோட்டரி சங்க தலைவர் பி.ஆர்.விக்ரம், செயலாளர் சந்தோஷ், வேலூர் கோட்டை ரோட்ரி சங்க ஆளுநர் ஸ்ரீதர், பலராமன், முன்னாள் தலைவர்கள் சீனிவாச ரெட்டி மற்றும் தமிழ்நாடு கிட்னி ஆராய்ச்சி பவுண்டேஷன் மருத்துவர்கள் நிர்வாகிகள், என பலர் கலந்துகொண்டு விழாவில் சிறப்புரையாற்றி இம்மருத்துவ முகாமை சிறப்பித்தனர். இந்த மருத்துவ முகாமில் சுமார் 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு மருத்துவ சோதனை செய்து பயனடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# காளையார்கோவிலில் புனித அருளானந்தர் திருவிழா கோலகால கொண்டாட்டம்




காளையார் கோவில் பிப்.4

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவிலில் புனித அருளானந்தர் ஆலயத்தில் செம்மண் புனிதர் அருளானந்தரின் திருவிழா கோலாகலமாக கொண்டாடப் பட்டது.

கொடியேற்றத்துடன் 10 நாட்கள் நவநாள் திருப்பலியுடன் கொண்டாடப்பட்டது. திருவிழாவின் மையக் கருத்தாக அருளானந்தர் வழியில் இயேசுவுக்கு சான்று பகர என்பதாகும். இதனை ஒவ்வொரு நாளும் நிபந்தனையற்ற அன்பால், நிந்தனையேற்கும் வாழ்வால், செயலுள்ள நம்பிக்கையால், இறைவார்த்தையை வாழ்வாக்கி, தன்னலம் துறந்து, உண்மைக்கு, இயற்கையை காத்து, அர்ப்பண வாழ்வால், இயேசுவுக்கு, நற்கருணை சமூகமாய் சான்று பகர என்ற தலைப்புகளில் சிந்திக்க அழைப்பு விடுக்கப்பட்டது.

புனித அருளானந்தரின் திருவிழா கூட்டுத்திருப்பலியை கூத்தலூர் பங்குத்தந்தை அருள்திரு திரவியம் தலைமையில் காளையார்கோவில் பங்குத்தந்தை அருள்திரு சேசு உதவி பங்குத்தந்தை பாஸ்டின் பாரதி முன்னிலையில் நடைபெற்று புனிதரின் தேர்பவனியானது காளையார்கோவில் மாநகரை சுற்றி வலம் வந்தது.

பல சமயத்தவரும் புனிதருக்கு மாலை அணிவித்து அருள் ஆசீரைப் பெற்றுச் சென்றனர். விழா ஏற்பாட்டினை கிராம கமிட்டியின் தலைவர் கேப்டன் ராசு செயலாளர் மரியதாஸ் பொருளாளர் செபஸ்தியான் துணைத் தலைவர்கள் பால்ஜோசப் தாமஸ் பங்குப் பேரவை துணைத் தலைவர் பெஸ்கி ஆரோக்கியம் செயலாளர் சகாய தைனேஸ் பொருளாளர் பீட்டர் துணைச் செயலாளர் லீலா சிறப்பாக செய்திருந்தனர்.

புனித வின்சென்ட் தேபவுல் சபையினர் நற்செய்தி பணியாளர்கள் மரியாயின் சேனையினர் குடும்பநல வாழ்வுப்பணி குழுவினர் பீடச் சிறுவர்கள் அன்பிய பொறுப்பாளர்கள் தன்னார்வலர்கள் பகுதி பொறுப் பாளர்கள் கிளை கிராம பொறுப்பாளர்கள் ஒருங்கிணைந்து செயல்பட்டனர். தேர்பவனி சிறப்பாக நடைபெற முன்னாள் ராணுவத்தினர் ஒழுங்குபடுத்தும் பணிகளை மேற்கொண்டனர். புனித அருளானந்தரின் கொடி இறக்கப்பட்டு திருவிழா நிறைவு பெற்றது.

# வேலூர் வடக்கு ரோட்டரி சங்கம் சார்பில் 50 பொன்விழா ஆண்டு முன்னிட்டு இலவச பொது மருத்துவம்-இருதய மருத்துவ முகாம்




வேலூர் பிப்,4

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, காந்திநகர் கிழக்கு, ஆக்சிலின் காலேஜ் சாலை, காந்திநகர் மகளிர் மன்றம் அரங்கில், வேலூர் வடக்கு ரோட்டரி சங்கம் சார்பில் 50 பொன்விழா ஆண்டு முன்னிட்டு இலவச பொது மருத்துவம் மற்றும் இருதய மருத்துவ முகாம் ரோட்டரி கிளப் ஆப் நார்த், தலைவர் பி.ஆனந்தன் தலைமையில் நடைபெற்றது.

இம் முகாமில் பொது மற்றும் லேப்ராஸ்கோபிக் அறுவை சிகிச்சை நிபுணர் எண்டோஸ்கோபிஸ்ட் மருத்துவர். எம்.ஜெகதீசன், இருதய நிபுணர் மருத்துவர். வி.வத்சலாஸ்ரீ மற்றும் செவிலியர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி மருத்துவ பரிசோதனை மேற்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் ரோட்டரி கிளப் ஆப் வேலூர் நார்த் செயலாளர் திருவேங்கடம், பொருளாளர் ரவிச்சந்திரன், இயக்குனர் கம்யூனிட்டி சர்வீஸ் ஹெல்த் என்.மோகன் மற்றும் கிளப் நிர்வாகிகள் ஆர்.ராஜராஜன், எம்.சேகர், வி.ஆறுமுகம், ஆர்.கலை அழகன் மற்றும் நிர்வாகிகள் உறுப்பினர்கள், வேலூர் கேஸ்ட்ரோ சென்டர் மருத்துவமனை, மருத்துவர்கள், செவிலியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி மருத்துவ முகாமை சிறப்பித்தனர். இம்முகாமில் சுமார் 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயனடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இறுதியில் தலைவர் ஆனந்தன் நன்றியுரையாற்றி விழா நிறைவுப்பெற்றது.



செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் 56வது நினைவு நாளையொட்டி 54வது வட்டக் கழகத்தின் சார்பில் மூகாம்பிகை நகர் மற்றும் வெற்றி நகர் சந்திப்புகளில் கருணாகரன் பாண்டியன் ஏற்பாட்டில் அண்ணாவின் திருவுருவப் படம் வைக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது இதில் வட்ட கழகத்தின் நிர்வாகிகள் நந்தகுமார்,கணேசன்,ரவி, ஸ்ரீதர், வெற்றி நகர்,பாய் ராமமூர்த்தி, சிடிஓ காலனி கரிகாலன், குமரவேல், ஐயப்பன், கார்த்தி, மணி, வெற்றி நகர் பூபதி, சிவசுப்பிரமணியம், சாய் நகர் ஏசுதாஸ், ரஞ்சித் மற்றும் கழகத் தோழர்கள் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு திருவுருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள்..

# கொடைக்கானலில் மதுவிலக்கு பிரிவு எஸ்.ஐ., எனக்கூறி வசூலில் ஈடுபட்ட போலி எஸ்.ஐ., கைது



கொடைக்கானல், பிப்.4

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் அடுக்கம் சாமகாட்டுபள்ளத்தை சேர்ந்த செல்வம் வீட்டிற்கு பச்சமலையான்கோட்டையைச் சேர்ந்த துரைராஜ்(39) போலீஸ் உடையுடன் பழநி மதுவிலக்கு பிரிவு எஸ்.ஐ., எனக்கூறி சென்று செல்வம் மீது வழக்கு உள்ளதாகவும், எஸ்.பி., புகாரின் அடிப்படையில் விசாரிக்க வந்ததாகவும் கூறினார். மேலும் வர மறுத்தால் அடித்து இழுத்துச் சென்று ஜெயிலில் அடைத்து விடுவேன் எனவும் மிரட்டி மாதம் ரூ. 10 ஆயிரம் தர வேண்டும் எனவும் கூறினார்.

துரைராஜ் நடவடிக்கையில் சந்தேகம் அடைந்த செல்வம் கொடைக்கானல் போலீசாருக்கு தகவல் தெரிவித்தார். உடனடியாக விரைந்து சென்ற கொடைக்கானல் போலீசார் போலி எஸ்.ஐ., துரைராஜை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்..

# தவெக பம்மல் தெற்கு பகுதி சார்பில் கொடியேற்றி வைத்து 200பேருக்கு அறுசுவை உணவு வழங்கல்




பம்மல் பிப்.4

செங்கல்பட்டு மாவட்டம் பம்மலில் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் அவர்கள் தனது கட்சியின் 2ஆம் ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு தமிழக அரசியல் புதிய எழுச்சியாக அதனை கொண்டாடும் வகையில் கழக தலைவர் விஜய்யின் ஆணைக்கிணங்க கழக பொதுச் செயலாளர் என்.ஆனந்த் அவர்களின் அறிவுறுத்தலின்படி தமிழக முழுவதும் தமிழக வெற்றி கழகத்தின் நிர்வாகிகள் கட்சி கொடியேற்றும் நிகழ்ச்சி மற்றும் அன்னதானம் வழங்கி கொண்டாடி வருகின்றனர்

அதனை தொடர்ந்து அக்கட்சியின் பம்மல் தெற்கு பகுதி தலைவர் பம்மல் ஏ.கண்ணன் தலைமையில் செங்கல்பட்டு மேற்கு மாவட்ட தலைவர் மின்னல் வி.குமார் அவர்களின் வழிகாட்டுதல்படி பம்மல் தெற்கு பகுதி தலைமை சார்பிலும் மற்றும் 10வது வட்ட தலைமை சார்பிலும் பம்மல் மெயின் ரோடு நடராஜன் தெருவில் கட்சியின் கொடி ஏற்றி 200 நபர்களுக்கு சிக்கன் பிரியாணி வழங்கப்பட்டது..

இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்த பம்மல் தெற்கு பகுதி தலைவர் பம்மல் ஏ.கண்ணன் துணை செயலாளர் ஜி.பராசக்தி, துணை தலைவர் ஆர்.ஷபீர், 10வது வட்ட தலைவர் நவீன்ராஜ், செயலாளர் பிரகாஷ், பொருளாளர் ஆகாஷ், துணைத் தலைவர் சபீர்அகமது, துணை செயலாளர் ஸ்ரீசாய் சூர்யா, இணை செயலாளர் விக்கி, துணை பொருளாளர் சிம்சன் மற்றும் தினேஷ்குமார், முகமது பாருக், முகமது ரஃபி ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தார் உடன் பம்மல் தெற்கு பகுதி இணை செயலாளர் ரஞ்சித்

12வது வட்ட தலைவர் ஜில்லா ரகு, பம்மல் தெற்கு பகுதி மகளிர் அணி புவனேஸ்வரி ரகு, இர்பான், மேலும் 10வது நிர்வாகிகள், 12வது வட்ட நிர்வாகிகள் மற்றும் பம்மல் தெற்கு பகுதியை சேர்ந்த கழக நிர்வாகிகள் 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்..

# பொழிச்சலூர் ஊராட்சியில் தமிழக வெற்றிக்கழகம் சார்பில் 300 நபர்களுக்கு அன்னதானம் வழங்கல்




பொழிச்சலூர் பிப்.4

பொழிச்சலூர் ஊராட்சியில் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் முதலாம் ஆண்டு வெற்றி விழாவை முன்னிட்டு 300 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது

கழகத்தின் தலைவர் தளபதி அவர்களின் சொல்லுக்கிணங்க மற்றும் கழக பொதுச்செயலாளர் என்.ஆனந்த் அவர்களின் வழிகாட்டில் படி செங்கல்பட்டு மேற்கு மாவட்ட தலைவர் மின்னல் வி.குமார் அவர்களின் அறிவுத்தலின்படி தமிழக வெற்றிக் கழகத்தின் முதலாம் ஆண்டு வெற்றி விழாவை முன்னிட்டு பொழிச்சலூர் பகுதி சார்பில் ஆவின் பால் நிலையம் அருகில் பல்லாவரம் தொகுதி தலைவர் டி சுறா ரவி அவர்கள் முன்னிலையில் பொழிச்சலூர் ஊராட்சி தலைமை ஜே.மணி ஜெயமோகன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு எஸ். ஜான் அவர்களின் ஏற்பாட்டில் சுமார் 300க்கு மேற்பட்டோர் ஏழை எளிய மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் தொகுதி துணைத் தலைவர் எஸ்.பார்த்திபன், பகுதி பொருளாளர் சந்துரு, வி.வினோத், எஸ்.பிரதீப், கார்த்திக், அருண்குமார், மகளிர் அணி ரெபேக்கா, இந்துமதி, வளர்மதி, பிரியா, ரதி, ஜெயந்தி உள்ளிட்ட மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய நிர்வாகிகள், மகளிர் அணி, மாவட்ட வழக்கறிஞர் பிரிவு, பகுதிநிர்வாகிகள் தொண்டரணி, இளைஞரணி, மாணவரணி, தகவல் தொழில்நுட்ப அணி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு நிகழ்ச்சி சிறப்பித்தனர்.




செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா எம்,எல்,ஏ தாம்பரம் சண்முகம் சாலையில் அறிஞர் அண்ணாவின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தியபின் அமைதி ஊர்வலமாக சென்று தாம்பரம் மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் இதில் மண்டல குழு தலைவர்கள் பகுதி கழக செயலாளர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர் உடன் மாமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள் வட்ட செயலாளர்கள், மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், வட்ட நிர்வாகிகள் மற்றும் கழகத் நிர்வாகிகள் பேரறிஞர் அண்ணாவின் அமைதி ஊர்வலத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்..



கன்னியாகுமரி மாவட்டம் கன்னியாகுமரி யில் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் அண்ணா நினைவு நாள் நிகழ்ச்சியை முன்னிட்டு ரவுண்டானா அருகில் அமைந்திருக்கும் அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.. இந்நிகழ்ச்சியில் திமுக அகஸ்தீஸ்வரம் ஒன்றிய செயலாளர் பாபு, கன்னியாகுமரி பேரூர் செயலாளர் குமரி ஸ்டீபன், கன்னியாகுமரி பேரூராட்சி கவுன்சிலர்கள், ஒன்றிய நிர்வாகிகள், தொமுச தொழிற்சங்க ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சியில் பேரறிஞர் அண்ணாவின் 56வது நினைவு நாளை முன்னிட்டு மானாமதுரை திமுக சார்பில் அண்ணாவின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.இந்த நிகழ்வில் மானாமதுரை நகர் செயலாளர் பொன்னுச்சாமி, மானாமதுரை கிழக்கு ஒன்றிய செயலாளர் துரை ராஜாமணி,மேற்கு ஒன்றிய செயலாளர் அண்ணாத்துரை , முன்னாள் மானாமதுரை ஒன்றிய பெருந்தலைவர் லதா அண்ணாத்துரை , மானாமதுரை நகர் மன்ற தலைவர் மாரியப்பன், கென்னடி மற்றும் மானாமதுரை அறங்காவலர் குழு தலைவர் கார்த்திக் ,உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் உடனிருந்தனர்

## பொழிச்சலூர் ஊராட்சி தமிழக வெற்றிக் கழகம் தலைமை சார்பில் ஆட்டோ ஓட்டுனருக்கு சீருடை மற்றும் வாட்டர் பாட்டில் வழங்கிகொண்டாட்டம்

பொழிச்சலூர் பிப் 04

பொழிச்சலூர் ஊராட்சி தமிழக வெற்றிக் கழகம் தலைமை சார்பில் 100 ஆட்டோவில் 2 ஆம் ஆண்டு லோகோ ஸ்டிக்கர் ஒட்டி 100 ஆட்டோ ஓட்டுனருக்கு சீருடை மற்றும் வாட்டர் பாட்டில் ஸ்வீட் வழங்கி கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது



செங்கல்பட்டு மாவட்டம் தமிழக வெற்றிக் கழகம் 2ஆம் ஆண்டு வெற்றி துவக்க விழாவை முன்னிட்டு தமிழக வெற்றிக் கழக தலைவர் தளபதி நல்வாழ்த்துக்களுடன் தவெக பொதுச்செயலாளர் என்.ஆனந்த் ஆணைக்கிணங்க பொழிச்சலூர் ஊராட்சி தமிழக வெற்றிக் கழகம் தலைமை சார்பில் 100 ஆட்டோவில் 2ஆம் ஆண்டு லோகோ ஸ்டிக்கர் ஒட்டி 100ஆட்டோ ஓட்டுனருக்கு சீருடை மற்றும் வாட்டர் பாட்டில் ஸ்வீட் வழங்கி கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்த பொழிச்சலூர் ஊராட்சி தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள் தலைவர் அர்.மணிகண்டன், செயலாளர் எம்.தமிழரசன் பொருளாளர் டி.ஆர்.தினேஷ், துணைத் தலைவர் எம்.நரேன், துணைச் செயலாளர் ஜே.சாலமன், துணைச் செயலாளர் வி.விஜய்கணேஷ், அமைப்பாளர் ஏ.பாலாஜி இணைச்செயலாளர் பி.சதீஷ், இணைச் செயலாளர் டி.பொற்செழியன், கௌரவத் தலைவர் பி.கஸ்பர்ராஜா, இரா. அரவிந்த்கணேஷ், சாம்சுந்தர் மற்றும் மகளிர் அணி சஜிலா உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்..

## பெரியகுளத்தில் தமிழக வெற்றிக் கழக நகர சார்பாக புதிய மாவட்ட செயலாளருக்கு வரவேற்பு





பெரியகுளம் பிப்.4

தேனி மாவட்டம் பெரியகுளத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட தமிழக வெற்றி கழகத்தின் வடக்கு மாவட்ட செயலாளராக பிரகாஷை மாநிலத் தலைவர் விஜய் அறிவித்தார். இதை தொடர்ந்து புதியதாக பொறுப்பு ஏற்றுக் கொண்ட தமிழக வெற்றி கழக தேனி வடக்கு மாவட்ட செயலாளர் பிரகாஷ் பெரியகுளத்தில் உள்ள அம்பேத்கர், தேவர் ஆகிய சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அதற்கு முன்பாக பெரியகுளத்திற்கு வருகை புரிந்த வடக்கு மாவட்ட செயலாளர் பிரகாஷ்க்கு தமிழக வெற்றிக் கழக நகர கழகத்திலிருந்து பட்டாசு வெடித்து, மலர்களை தூவி, இனிப்புகள் வழங்கி சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில்,மாவட்ட இணை செயலாளர் விக்னேஷ்,நகர செயலாளர் தினேஷ், நகர இணைச் செயலாளர் முகமது வாஜீத்,நகர பொருளாளர் இம்ரான்கான் மற்றும் பெரியகுளம் தமிழக வெற்றிக்கழக நகர நிர்வாகிகள் வார்டு பொறுப்பாளர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரைக்கு கடந்த சனிக்கிழமை திருமண நிகழ்ச்சிக்காக சென்றார் நிகழ்ச்சிகள் முடிந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை 3 மணிக்கு மேல் மதுரை விமான நிலையத்திற்கு வருகை தந்தார் அதற்கு முன்பு சிவகங்கை மாவட்டம் மானாமதுரை இருப்புப் பாதை காவல் நிலைய காவலர்கள் லாடனேந்தல் ரயில்வே மேம்பாலம், திருப்புவனம் ரயில்வே மேம்பாலம், மணலூர் ரயில்வே மேம்பாலம் காவல் பணியில் காவலர்கள் திவாகர், மனோகர்,முருகன் ஆகியோர் பணியில் இருந்து வந்தனர் அவர்களை மானாமதுரை இருப்பு பாதை காவல் நிலைய சார்பு ஆய்வாளர் தனுஷ்கோடி ஆய்வு மேற்கொண்டார்..



மதுரை மாநகராட்சி புதிய ஆணையாளராக சித்ரா விஜயன், பொறுப்பேற்றுக் கொண்டார்.



மதுரை மாவட்ட ஆட்சியரின் பொதுமக்கள் குறைதீர்க்கும் நாளில் பொதுமக்களிடம் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் மா. சௌ.சங்கீதா பெற்றுக்கொண்டார்.

## திருவாடானை அருகே சாலையில் ஆவின் பால் ஏற்றி வந்த வேன் கண்மாய் க்குள் கவிழ்ந்து விபத்து

திருவாடானை . பிப்.4



இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை அருகே கல்லூர் பகுதியில் மதுரையில் இருந்து தொண்டி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் ஆவின் பால் ஏற்றி வந்த வேன் நிலைதடுமாதிரி அருகில் இருந்த கன்மாய்க்குள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. காரைக்குடியிலிருந்து தினமும் ஆவின் பால் ஏற்றி வந்து சின்கீரமங்கலம் வழியாக திருவாடானை நோக்கி சென்று கொண்டு இருந்த போது மதுரை தொண்டி தேசிய நெடுஞ்சாலையில் எதிரே செம்மறி ஆடுகள் சாலையில் வந்ததை பார்த்து திடீரென பிரேக் அடித்ததில் நிலைதடுமாறி வேன் கல்லூர் கண்மாய்த்துள் பாய்ந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானது . ஓட்டுநர் மற்றும் கிளீனர் சிறுகாயங்களுடன் திருவாடானை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்க்கப் பட்டனர். விபத்து குறித்துதகவலறிந்து விரைந்து வந்த திருவாடானை காவல் துறையினர் வாகனத்தை திருவாடானை அருகே உள்ள சம்பாநெட்டியைச் சேர்ந்த அருஞ்சாமி மகன் வின்சென்ட் ராஜ் (24), கிளீனர் அதே பகுதியை சேர்ந்த லூர்து மகன் சந்திரசேகர் (30) என்பது விசாரணையில் தெரிய வந்தது மேலும் விபத்து குறித்து திருவாடானை காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## பேரறிஞர் அண்ணா நினைவு நாள் பெரியகுளம் திமுக சார்பில் மாலை அணிவித்து மரியாதை

பெரியகுளம் பிப்.4




தேனி மாவட்டம் பெரியகுளம் தேனி வடக்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 57 வது நினைவு தினத்தினை முன்னிட்டு பெரியகுளம் நகர் கழக அலுவலகத்தில் இருந்துபழைய பேருந்து நிலைய வளாகப் பகுதியில் உள்ள அண்ணா சிலை வரை திமுக வினர் ஊர்வலமாக சென்று பேரறிஞர் அண்ணாவின் திருவுருவ சிலைக்கு தேனி வடக்கு மாவட்ட கழக செயலாளரும் தேனி நாடாளுமன்ற தொகுதி உறுப்பினருமான தங்க தமிழ்செல்வன் தலைமையில் மாலை அணிவித்து மௌன அஞ்சலி செலுத்தினர்.தேனி வடக்கு மாவட்ட கழக அவைத் தலைவர் செல்லப்பாண்டியன், பெரியகுளம் நகர் கழக செயலாளர் முகமது இலியாஸ், பெரியகுளம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் எல்,எம். பாண்டியன்,பெரியகுளம் நகர்மன்ற தலைவர் சுமிதா சிவகுமார்,முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு பெருந்தலைவர் தங்கவேல்,மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ஸ்டீபன், விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் கார்த்திக், தாமரைக்குளம் பேரூராட்சி தலைவர் பால் பாண்டி, வடுகபட்டி பேரூராட்சி தலைவர் நடேசன் உட்பட கழக நிர்வாகிகள்,வார்டு செயலாளர்கள்,மாவட்ட பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள், இளைஞரணி மற்றும் மாணவரணியினர், தொழிற்சங்க நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, நகர, ஒன்றிய ,பேரூர் கழக நிர்வாகிகள் கழக தொண்டர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## வேலூரில் திருப்பத்தூர் சேக்ரட் ஹார்ட் கல்லூரியில் சொல் தமிழா சொல் பேச்சுப்போட்டி

வேலூர், பிப் 4




எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத் தமிழ்ப்பேராயம் எஸ்.ஆர்.எம். கல்விநிறுவன வேந்தர் டாக்டர் தா. இரா. பாரிவேந்தரால் 2010 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை தமிழ்ப்பேராயம் தலைசிறந்த எண்ணற்ற தமிழ்ப்பணிகளை ஆற்றிவருகிறது. தமிழ் அருட்சுனைஞர் சான்றிதழ்ப் படிப்பு, வள்ளலார் சான்றிதழ்ப் படிப்பு முதலானவற்றோடு பல இலட்சம் மதிப்பிலான தமிழ்ப்பேராய விருதுகள் வழங்குதல், அரிய நூல்களை வெளியிடுதல், பன்னாட்டு, தேசிய மாநாடுகளை ஒருங்கிணைத்தல் எனப் பல்வேறு சிறந்த பணிகளை ஆற்றிவருகிறது. தமிழ்ப் பேராயம் வழி மாணவர்களின் ஆற்றலை வெளிப்படுத்த பல ஆயிரம் மாணவர்களைக் கொண்ட பாரிவேந்தர் மாணவர் தமிழ் மன்றம் செயல்பட்டு வருகிறது.

அரும்பணிகள் பல ஆற்றிவரும் தமிழ்ப்பேராயம் இதன் தொடர்ச்சியாக கல்லூரி மாணவர்களுக்கான பேச்சாற்றலை அங்கீகரிக்கும் நோக்கத்தில் சொல் தமிழா சொல் 2025 என்னும் தலைப்பில் மிகப்பிரம்மாண்டமான பேச்சுப் போட்டியைத் தற்போது ஏற்பாடு செய்துள்ளது. தமிழகம் மற்றும் புதுச்சேரியை உள்ளடக்கி 9 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு இப் பேச்சுப்போட்டி பல்வேறு கல்லூரிகளில் நடத்தத் திட்டமிடப்பட்டது.

2வது மண்டலத்திற்கான பேச்சுப் போட்டி வேலூரில் திருப்பத்தூர் சேக்ரட் ஹார்ட் கல்லூரியில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

350க்கும் மேற்பட்ட மாணவர்கள், 6 நடுவர்கள் என மிகப்பிரம்மாண்டமாகச் வேலூர் மண்டலப் போட்டி நடைபெற்றது. பல சுற்றுகளாக நடைபெற்ற இப்போட்டிகளில் வெற்றிபெற்றவர்களின் விவரம் பின்வருமாறு முதல் பரிசு 1,00,000 ரூபாய் கு. மதுஷா, இந்திய கலை மற்றும் அறிவியல் கல்லூரி இரண்டாம் பரிசு 75,000 ரூபாய் வெ. தமிழ் குமரன் சி.அப்துல் ஹக்கீம் கல்லூரி மூன்றாம் பரிசு 50,000 ரூபாய் அ. தமிழரசி கலைஞர் கருணாநிதி அரசு கலைக் கல்லூரி இப்போட்டியில் வெற்றி பெற்றோருக்குச் சான்றிதழ்களை கரு. நாகராசன், தலைவர், தமிழ்ப்பேராயம் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார். வெற்றியாளர்களில் முதல் நால்வர் மாநில அளவிலான இறுதிப்போட்டியில் பங்கேற்கத் தகுதிபெறுவர். போட்டிகளில் வென்றோருக்கான பரிசுத் தொகை மாநில அளவிலான இறுதிப்போட்டி அன்று வழங்கப்படும்.

## பெரியகுளம் அருகே ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரியில் 52வது பட்டமளிப்பு விழா

பெரியகுளம் பிப் .4




தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே உள்ள ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் தன்னாட்சிக் கல்லூரியில் 52வது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. கல்லூரி முதல்வர் அருட்சகோதரி முனைவர் சி. சேசுராணி தலைமை தாங்கியதுடன் வரவேற்புரை வழங்கி அறிக்கை வாசித்தார். கல்லூரிச் செயலர் அருட்சகோதரி முனைவர் சாந்தா மேரி ஜோஷிற்றா, இல்லத்தலைமை அருட்சகோதரியும் நூலகப் பொறுப்பாளருமான முனைவர் பாத்திமா மேரி சில்வியா மற்றும் தேர்வு ஆணையர் அருட்சகோதர் முனைவர் இருதய லூர்து கிளாடிஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட கொடைக்கானல், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் கலா பட்டமளிப்பு விழாவில் பேசுகையில் “போட்டி நிறைந்த உலகில் பெண்கள் குடும்பத்திலும், சமூகத்திலும் காணப்படும் சவால்களை எதிர்கொள்ள தங்களிடத்தில் மறைந்திருக்கும் திறமைகளை வெளிக்கொணர வேண்டும். பொருளாதாரம், தொழில் வளர்ச்சி, தேசிய மனிதவள மேம்பாட்டுத் துறைகளில் தங்களை ஈடுபடுத்தி, பெண்கள் தலைமைத்துவப் பண்பில் சிறந்து விளங்கி எதிர்காலத்தில் முன்னேற வேண்டும். அரசால் அங்கீகரிக்கப்பட்ட பெண்களுக்கான நலத்திட்டங்களை நல்ல முறையில் பயன்படுத்தி தொழில் முனைவோராக மேம்பட வேண்டும். இந்தியாவை உலகளாவிய நாடுகளில் சிறந்த நாடாக உயர்த்துவதில் பெண்களாகிய நாம் முழுமையாக ஈடுபட வேண்டும்“என்று பேசினார். அதனைத் தொடர்ந்து இளங்கலை. முதுகலை. மற்றும் சான்றிதழ் பட்டம் என பல்வேறு பட்டங்களை 720க்கு மேற்பட்ட மாணவியர்களுக்கு வழங்கினார். இவ்விழாவில் அனைத்து துறை தலைவர்கள், பேராசிரியர்கள், பெற்றோர்கள், மாணவிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

மாலை தந்தி



### மாநில அளவிலான ஒற்றைக்கம்பு - இரட்டைக்கம்பு சிலம்ப போட்டியில்

## மானாமதுரை சீனி ஆசான் சிலம்பம் பள்ளி சாதனை



மயிலாடுதுறை, பிப்.4

தமிழ்நாடு அரசு பள்ளி கல்வித்துறை சார்பாக மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார் கோவிலில் நடத்திய மாநில அளவிலான சிலம்ப போட்டியில் (38 மாவட்டங்களில் இருந்து) மானாமதுரை சீனி ஆசான் சிலம்ப பள்ளியை சார்ந்த 4 மாணவ மாணவிகள் கலந்து கொண்டதில் 17 வயது பிரிவில் ஒற்றைக்கம்பு முறையில் மாணவர் ராஜேஷ் வெள்ளிப்பதக்கத்தையும், இரட்டைக்கம்பு முறையில் மாணவர் ரித்திஷ் வெள்ளிப்பதக்கத்தையும், 14 வயது பிரிவில் ஒற்றைகம்பு முறையில் மாணவர் தக்ஷித் வெள்ளிப்பதக்கத்தையும், 17 வயது பிரிவில் இரட்டைக்கம்பு பிரிவில் மாணவி ரோஷினி ஆறுதல் பரிசையும் பெற்று சாதனை படைத்து நமது சிவகங்கை மாவட்டத்திற்கு பெருமையை பெற்றுக்கொடுத்துள்ளது. வெற்றி பெற்ற மாணவ மாணவிகளையும் அவர்களுக்கு கடுமையான பயிற்சி அளித்த சீனி ஆசான் சிலம்ப பள்ளியின் பயிற்சியாளர்கள் செல்வம் மற்றும் முனியாண்டி அவர்களையும் பெற்றோர்களும், பொதுமக்களும் வெகுவாக பாராட்டினர் மேலும் தமிழக அரசு நடத்திய மாநில சிலம்ப போட்டிகளில் தொடர்ந்து சீனி ஆசான் சிலம்ப பள்ளி மாணவ மாணவிகள் 3 ஆவது முறையாக வெற்றிபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதுஞ்.

## பெரியகுளத்தில் அண்ணா நினைவு நாள் :அதிமுக ஓ.பி.எஸ் அணி சார்பில் மாலை அணிவித்து மரியாதை



பெரியகுளம் பிப்.4

தேனி மாவட்டம் பெரியகுளத்தில் அஇஅதிமுக தொண்டர்கள் உரிமை மீட்பு குழு ஒருங்கிணைப்பாளர், தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் ஆணைக்கிணங்க பெரியகுளம் நகர் கழக செயலாளர் அப்துல் சமது, நகர் கழக துணைச் செயலாளர், நகர்மன்ற உறுப்பினர், ஓ. சண்முகசுந்தரம் தலைமையில், கழக அமைப்புச் செயலாளர்கள் மஞ்சுளா முருகன், என். வி. ராதா, ஒன்றிய கழக செயலாளர் செல்லமுத்து ஆகியோர் முன்னிலையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 57 வது நினைவு தினத்தினை முன்னிட்டு பெரியகுளம் பழைய பேருந்து நிலைய வளாகப் பகுதியில் உள்ள பேரறிஞர் அண்ணாவின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மௌன அஞ்சலி செலுத்தினர். இந்நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர் சிவக்குமார், கழக பிரமுகர்கள் மாங்காய் முத்து, முருகன் உள்பட கழக நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, நகர, ஒன்றிய ,பேரூர் கழக நிர்வாகிகள் கழக தொண்டர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



பேரறிஞர் அண்ணா நினைவு நாளை முன்னிட்டு மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் திருகோயில் சமபந்தியில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி கலந்து கொண்டார். மாவட்ட ஆட்சித்தலைவர் மா.செள.சங்கீதா, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.வெங்கடேசன் (சோழவந்தான்)..மு.பூமிநாதன் (மதுரை தெற்கு), அருள்மிகு மீனாட்சியம்மன் திருகோயில் தக்கார் ருக்மணி பழனிவேல்ராஜன் ஆகியோர் உடன் உள்ளனர்.





மதுரை கே.கே.நகரில் கேலக்ஸி இன்சூரன்ஸ் மண்டல அலுவலகம் திறப்புவிழாநடைபெற்றதுஇந்நிகழ்வில் கேலக்ஸி இன்சூரன்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் சீனிவாசன் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார்.மதுரை மண்டல துணைத் தலைவர் மகேந்திரன் வரவேற்புரை ஆற்றினார் முதுநிலை விற்பனை மேலாளர் குரு பிரகாஷ், மனித வள மேலாளர் சாகா, தமிழ்நாடு மார்க்கெட்டிங் பிரிவு துணைத் தலைவர் கண்ணதாசன், சந்தோஷ் ராஜா, சிறப்பு விருந்தினர்களாக வடமலையான் மருத்துவமனை நிர்வாக இயக்குனர் டாக்டர் புகழகிரி, மோகன் சிறப்பு மருத்துவமனை டாக்டர் மோகன், தேவதாஸ் மருத்துவமனை துணைத் தலைவர் சதீஷ் தேவதாஸ், அப்பல்லோ மருத்துவமனை செயல் அலுவலர் டாக்டர் நீலக்கண்ணன் , மாதவன் இருதய மைய மருத்துவர் டாக்டர் மாதவன், மீனாட்சி மிஷன் மருத்துவமனை மருத்துவ மேலாளர் கண்ணன், முதுநிலை மேலாளர் பாண்டியராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.




தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் புதியதாக கட்டப்பட்டுள்ள போடிநாயக்கனூர் சிவில் இன்ஜினியரிங் அசோசியேசன் கட்டிட திறப்பு விழா தொட்டராய பெருமாள் நகர், மேல சொக்கநாதபுரத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இத்திறப்பு விழாவில் கௌரவ ஆலோசர்களாக .ரகுநாகநாதன், . சுப்புராஜ், பொறுப்பாளர்களாக தலைவர் . அர்ஜீனன், இணைத் தலைவர் . திருக்குமரன், செயலாளர் .கார்த்திக் , இணைச் செயலாளர் .முகேஷ் குமார், பொருளாளர் . கருத்தபாண்டி மற்றும் செயற்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.




தேனி மாவட்டம் உத்தமபாளையம் பகுதியில் சாலை பாதுகாப்பு மாதம் நிறைவு நாளை முன்னிட்டு வருவாய் கோட்டாட்சியர் தாட்சாயினி கொடி அசைத்து பேரணியை துவங்கி வைத்தார், உடன் வட்டார போக்குவரத்து ஆய்வாளர் சுந்தர்ராஜன் தலைமையேற்றார். இந்நிகழ்வின் போது வாகன ஓட்டிகளுக்கு விபத்தில்லா வாகனம் ஓட்டுவது குறித்தும் சாலை விதிகளை முறையாக பின்பற்றுவது, இரவு நேரங்களில் எவ்வாறு வாகனம் ஓட்டுவது மற்றும் தலைக்கவசம் அணிவதன் முக்கியத்துவம் குறித்தும் வட்டார ஆய்வாளர் சுந்தர்ராஜன் வாகன ஓட்டிகளுக்கு எடுத்துரைத்தார்.





தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் டவுன் 3வது வார்டு தேரடி தெருவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ காளியம்மன் திருக்கோவில் ஆலய நூதன விக்கிரக அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா 02022025 ஞாயிற்றுக்கிழமை காலை 9.15 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் மஹா கும்பாபிஷேகம் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. காலை 5 மணிக்கு மேல் போடி சாலை காளியம்மன் கோவிலில் இருந்து பக்தகோடி பெருமக்கள் பால்குடம் எடுத்து வந்தனர். அதனைத் தொடர்ந்து11 மணிக்கு மேல் சிறப்பு அன்னதானம் நடைபெற்றது. அது சமயம் தேரடி தெருவில் வசிக்கும் ஊர் பொதுமக்களும் மற்றும் ஆன்மீகம் மெய்யன்பர்களும் திரளாக கலந்து கொண்டு அம்மனின் அருள் ஆசி பெற்றுச் சென்றனர்.



தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் வட்டம் கீழச்சொக்கநாதபுரம் கிராமத்தில் ராஜகம்பள அல்லிக்குல அனுபக்கவுண்டர் உறவின் முறைக்கு பாத்தியப்பட்ட அருள்மிகு ஸ்ரீ விநாயகர் ஸ்ரீ காளியம்மன் ஸ்ரீ முருகன் திருக்கோவிலின் மஹா கும்பாபிஷேக விழா அன்று 02022025 ஞாயிற்றுக்கிழமை காலை 7.35 மணிக்கு மேல் 9.15 மணிக்குள் நடைபெற்றது. நிகழ்ச்சியின் தலைவர் மா.சொர்ணதுரை, செயலாளர் கு. முத்துக்குமார், பொருளாளர் சு சாமிராஜ் மற்றும் அப்பகுதி ஊர் பொதுமக்களும் ஆன்மீக மெய்யன்பர்களும் திரளாக கலந்து கொண்டு கடவுளின் அருள் ஆசி பெற்றுச் சென்றனர்.



சுவாமி விவேகானந்தர் கட்டிட கட்டுமான தொழிலாளர் நல சங்கத்தின் 27வது ஆண்டு விழா பள்ளி மாணவ மாணவிகளுக்கு நோட் புத்தகங்கள் மற்றும் எழுதுபொருட்கள் வழங்கும் விழா சங்கப் பிரதிநிதிகள் இணைவேந்தல் படத்திறப்பு விழா பேச்சியம்மன் படைத்த பகுதியில் நடைபெற்றது விவேகானந்தர் அச்சக நிர்வாகி குமரன் நோட்டுப் புத்தகங்களை பள்ளி மாணவ மாணவிகளுக்கு வழங்கினார் சங்கப் பிரதிநிதிகள் திருவுருவப்படத்தை துணை மேயர் நாகராஜன் தந்து வைத்தார் இதில் சங்கத் தலைவர் கணேசன் ராமு ஆறுமுகம் பாஸ்கரன் ராஜ பூபதி கூடலிங்கம் பிச்சை கணபதி நாராயணன் உட்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

## நத்தம் மந்தையம்மன் கோவில் கும்பாபிஷேக விழா



நத்தம், பிப்,4

திண்டுக்கல் மாவட்டம் நத்தம்கொண்டையம்பட்டியில் உள்ள மந்தையம்மன் கோவிலில் கும்பாபிஷேக விழா நடந்தது. இதையொட்டி கடந்த 30ம் தேதி ஆண்டிமடத்து விநாயகர் கோவிலில் இருந்து கன்னிமார் தீர்த்தம் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு காப்பு கட்டுதலுடன் விழா தொடங்கியது. தொடர்ந்து 31ம் தேதி முதல் நாள் அனுக்கை, தனபூஜை, கணபதி ஹோமம், முதல கால யாகசாலை பூஜைகள் நடந்தது.பின்னர் அதே யாகசாலையில் இரண்டு நாட்கள் பூர்ணாகுதி தீபாராதனைகள் மற்றும் இரண்டாம் மற்றும் மூன்றாம் கால யாக பூஜைகள் நடந்தது.தொடர்ந்து நேற்று காலை ஆறு கால யாகசாலை பூஜைகளை தொடர்ந்து காசி, ராமேஸ்வரம், கரந்தமலை,அழகர் மலை உள்ளிட்ட பல்வேறு புனித ஸ்தலத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித தீர்த்த குடங்கள் பூஜைகளுக்கு பிறகு யாகசாலையில் இருந்து கோபுர உச்சிக்கு ஊர்வலமாக எடுத்து செல்லப்பட்டது.அங்கு சிவாச்சாரியார்களின் வேத மந்திரங்கள் முழங்க குடம்,குடமாக கலசத்தில் புனித தீர்த்தங்கள் ஊற்றப்பட்டது. அப்போது வானத்தில் கருடன்கள் வட்டமிட்டன. இதில் சுற்றுவட்டாரங்களிலிருந்தும், வெளி மாவட்டங்களிலிருந்தும் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். அவர்களுக்கு பூஜை மலர்களும், புனித தீர்த்தங்களும், அன்னதானமும் வழங்கப்பட்டன. விழாவிற்கான ஏற்பாடுகளை கொண்டையம்பட்டி ஊர் பொதுமக்கள் செய்திருந்தனர்.





திண்டுக்கல் மாவட்டம் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலில் அறிஞர் அண்ணா நினைவு நாளை முன்னிட்டு பொது விருந்து மலைக்கோவிலில் நடைபெற்றது. இந்தப் பொது விருந்தில் கலந்து கொண்ட ஏழை எளிய மக்கள் 30 பேருக்கு கோவில் இணை ஆணையர் மாரிமுத்து இலவச வேஷ்டி சேலை வழங்கினார். இந்நிகழ்வில் திருக்கோவில் அறங்காவலர் அன்னபூரணி பழனி நகர மன்ற துணைத் தலைவர் கந்தசாமி கோவில் துணை மற்றும் உதவி ஆணையர்கள் மற்றும் திருக்கோவில் அலுவலர்கள் பணியாளர்கள் கலந்து கொண்டனர்

## பேரறிஞர் அண்ணாவின் 56 ஆவது நினைவு நாள் மதிமுக சார்பாக மலர் தூவி புகழஞ்சலி




வத்தலகுண்டு பிப்.4

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு மதிமுக சார்பாக வத்தலகுண்டு காளியம்மன் கோவில் திடலில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 56 வது நினைவுநாள் முன்னிட்டு அண்ணாவின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ் சலி செலுத்தினர் வத்தலகுண்டு மதிமுக ஒன்றிய, பேரூர் சார்பாக பேரறிஞர் அண்ணாவின் திருவருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் துவி புகழஞ்சலி செலுத்தினர் . நிகழ்விற்கு மதிமுக ஒன்றிய செயலாளர் மருது ஆறுமுகம் தலைமையில் அஞ்சலி செலுத்தப்பட்டது மாவட்ட மருத்துவ அணி செயலாளர் சதீஷ் பேரூர் பொருளாளர் ம.கனேசன், து. செயலாளர் அர்ஜீன் ஆகியோர் முன்னிலை வைத்தனர் பேரூர் நிர்வாகிகள் பிரபாகரன், வரவேற்புரை ஆற்றினார் மருது, பரமேஸ்வரன் , திவாகர் ஆகியோர் .பிரிஜிட் ஆரோக்கியமேரி மாவ.மகளிர் அணி து.செயலாளர், அ. மூர்த்தி மாவட்ட இலக்கிய அணி து.செயலாளர், ஷி.செந்தில் மாவட்ட பிரதிநிதி , சேவுகம்பட்டி து.செயலாளர் திருப்பதி, ராஜபாண்டி, விவசாய அணியினர் கணவாய்பட்டி பெருமாள், எழுவணம்பட்டி முருகேசன், செங்கடாம்பட்டி கருணாகரன் , இளைஞரணி விஜயகுமார் ராமநாயக்கன்பட்டி) , மாணவரணி காமாட்சிபுரம் சுதாகர், நாகராஜ், தொண்டரணி மதலைமுத்து பொதுமக்கள் கலந்துகொண்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர் முடிவில் இலக்கிய அணி நாகேந்திரன் நன்றி கூறினார் மற்றும் கழக முன்னோடிகள் நிர்வாகிகள் சார்பு அணியினர் என பலர் கலந்து கொண்டனர்

Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161